## விவசாயக் கருவிகளை மானியத்தில் பெறலாம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயக் கருவிகளை 50 சத மானியத்தில் பெற வேளாண் பொறியியல் துறை அலுவலகங்களை விவசாயிகள் நவ. 30-ம் தேதிக்குள் தொடர்பு கொள்ளலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் மேலும் தெரிவித்திருப்பது:

தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்கு 50 சத மானியத்தில் பவர் டில்லர், களை எடுக்கும் இயந்திரம், நடவு இயந்திரம், மண் தூளாக்கும் கருவி, வைக்கோல் கட்டும் இயந்திரம், தேங்காய் உரிக்கும் இயந்திரம், பூச்சி மருந்து தெளிக்கும் விசைத் தெளிப்பான்கள், கைத் தெளிப்பான்கள், அறுவடை இயந்திரம், நேரடி நெல் விதைப்பு இயந்திரம் போன்ற இயந்திரங்களை வழங்க ரூ. 2.55 கோடியை தமிழக முதல்வர் விடுவித்து உத்தரவிட்டுள்ளார்.

இந்த இயந்திரங்களை 25 சதம் முதல் 50 சதம் வரை மானியத்தில் வாங்க விருப்பமுள்ள அனைத்து விவசாயிகளும் உடனடியாக தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டையில் அமைந்துள்ள வேளாண் பொறியியல் உபகோட்ட அலுவலகங்களை அணுகலாம். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கப்படும்.

பதிவு செய்ய வரும் விவசாயிகள் விண்ணப்பத்துடன் குடும்ப அட்டையின் நகல், கணினி சிட்டா அடங்கல், பயிர் செய்வதற்கான கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றுடன் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

இயந்திரங்களை மானியத்தில் வாங்க நவ. 30-க்குள் தஞ்சாவூர் அலுவலகத்தை 99440 71322 என்ற எண்ணிலும், கும்பகோணம் அலுவலகத்தை 94423 99911 என்ற எண்ணிலும், பட்டுக்கோட்டை அலுவலகத்தை 94439 18295 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

## பழனி அருகே மர்ம நோய் தாக்கி மாடுகள் பலி

பழனி அருகே கீரனூரில், மர்ம நோய் தாக்கியதில் 10-க்கும் மேற்பட்ட மாடுகள் அடுத்தடுத்து பலியாகியுள்ளன.

பழனி நகருக்கு, சுற்றுப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் இருந்து பால் கொண்டு வரப்படுகிறது. கிராமங்களில் பல பகுதிகளிலும் பால் பிரதான தொழிலாக இருப்பதால், நகரில் பால் குளிரூட்டும் நிலையமும் உள்ளது.

கீரனூரில் ஒரு தனியார் பண்ணையில் சுமார் 50 மாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், பண்ணையில் இருந்த பல மாடுகள் அடுத்தடுத்து மர்ம நோய் தாக்கி உயிரிழந்துள்ளது. நோய் பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு வாயில் நுரை தள்ளி நடக்க முடியாத நிலை ஏற்பட்டு, இறந்துவிட்டனவாம்.

இந்த அறிகுறி பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாய தோட்டங்களில் வளர்க்கப்படும் மாடுகளுக்கும் ஏற்பட்டுள்ளது. இது குறித்து, அருகேயுள்ள கால்நடை உதவி மருத்துவர்களுக்கும், பழனியில் உள்ள கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால், எந்தவித பதிலும் இல்லையாம்.

அதைத் தொடர்ந்து, புதன்கிழமை இறந்த மாடுகளை ஜேசிபி மூலம் தூக்கிச் சென்று தொப்பம்பட்டியில் மறியல் செய்ய ஏற்பாடு நடைபெற்றது.

இது குறித்து தகவலறிந்த போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து சமரச முயற்சியில் ஈடுபட்டனர்.

அதன்பின்னரே, திண்டுக்கல் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் சத்யநாராயணன், பாபுஜி மற்றும் மருத்துவக் குழுவினர் வந்து பிரேதப் பரிசோதனை மேற்கொண்டு, முக்கிய உறுப்புகளை சென்னைக்கு ஆய்வுக்கு அனுப்பியுள்ளனர்.

முடிவுகள் வந்த பின்னரே மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய்களுக்கு எந்த விதமான மருந்து வழங்குவது என பரிந்துரை செய்யப்படும் என, கால்நடை மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மர்ம நோய் தாக்கி பலியான மாடுகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை

போடி அருகே எரணம்பட்டியில் மர்ம நோய் தாக்கி பலியான மாடுகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமியிடம் எரணம்பட்டி ஊராட்சித் தலைவர் எல்.ஜானகி மனு அளித்தார்.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் ஆட்சியரிடம் அவர் அளித்த மனு விவரம்: ஏரணம்பட்டியில் பெரும்பாலான விவசாயத் தொழிலாளர்கள், கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த அக்.23-ம் தேதி எரணம்பட்டியில் மர்ம நோய் தாக்கி 15 மாடுகள் பலியாயின. கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் தடுப்பூசி போடப்பட்டும், கடந்த 2 நாள்களில் பொன்ராஜ், கூடலிங்கம் ஆகியோரின் மாடுகள் நோயால் இறந்தன.

நோய் தாக்குதலால் இறந்த மாடுகளுக்கு நிவாரணமாக, பாதிக்கப்பட்ட 17 விவசாயத் தொழிலாளர்களுக்கு தாட்கோ திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்குவதற்கு முழு மானியம் வழங்க வேண்டும் என்று மனுவில் தெரிவித்துள்ளார்.

## நெல் கொள்முதல் செய்ய வலியுறுத்தல்

ஈரப்பதத்தைக் கணக்கிடாமல் குறுவை நெல்லை அரசு கொள்முதல் செய்ய வேண்டுமென விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை ஆட்சியர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

வை. செல்வராஜ்: நிலுவையிலுள்ள பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மழைக்காலங்களில் குளங்களில் நீரை சேமிக்க மாவட்ட நிர்வாகம் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்வதுடன், கொள்முதல் நிலையங்களில் குறுவை நெல்லை ஈரப்பதம் கணக்கிடாமல் கொள்முதல் செய்ய வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் 2-வது கட்டமாக கடன் வழங்க வேண்டும்.

ஜெயராமன்: கடந்த காலங்களில் உயிர் உரங்கள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டன. நிகழாண்டு மானியத்தில் உயிர் உரங்கள் வழங்கப்படவில்லை. எனவே, மானியத்தில் உயிர் உரம் வழங்க வேண்டும். திருத்துறைப்பூண்டி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும்.

ராமச்சந்திரன்: வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ளவர்களால் நியாயவிலைக் கடைகளில் 35 கிலோ அரிசி பெற முடியவில்லை. இதுகுறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். புதிய விவசாயிகளுக்கு கடன் வழங்க வேண்டும்.

பழனிவேல்: நிகழாண்டு வழக்கத்தைவிட மழை குறைவாக பெய்துள்ளதால், பயிர் வளர்ச்சி குறைந்துள்ளது. கோட்டூர் பகுதியில் குறைந்தளவே மழை பெய்துள்ளதால் இதுகுறித்து ஆய்வு நடத்த வேண்டும்.சம்பா பயிர் சில இடங்களில் விரைவில் அறுவடைக்கு வந்துவிடும் சூழல் உள்ளது. எனவே, காலத்தில் நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும். எண்ணெய் வித்துகளை அதிகரிக்க வேண்டும். கோடைகாலத்திலேயே தூர்வாரும் பணியை செய்ய வேண்டும். பாண்டியன்: கோரையாற்றில் கொள்ளளவுக்கு அதிகமாக தண்ணீர் வந்தாலும் வயல்களுக்கு தண்ணீர் கிடைப்பதில்லை. காரணம், ஆறுகளில் மணல் திட்டுகள் அதிகரித்துள்ளது. இதனால், நீரோட்டம் தடைபடுகிறது. சில இடங்களில் சட்டர்களுக்கு கீழ் ஆறுகள் பள்ளமாகியுள்ளது. டெங்கு காய்ச்சலைத் தடுக்க மாவட்டம் முழுவதும் நிலவேம்பு கசாயம் வழங்க வேண்டும்.

ராஜதுரை: பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். கறவை மாடுகள் வளர்க்க கடன் வசதி ஏற்படுத்த வேண்டும். நெடுவாக்கோட்டைப்பகுதியில் சாலைகளை சீரமைக்க வேண்டும். மாவட்டத்தில் கொசுத் தொல்லையைத் தடுக்க வேண்டும். மன்னார்குடி பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

பாலகுமாரன்: பேரளம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் சிங்சல்பேட் பூச்சிக்கொல்லி மருந்துகள் இல்லாததால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இதுகுறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் பேசியது:

மாவட்டத்தில் நிலவும் கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்தப்படும். விவசாயிகள் அனைவரும் அடுத்த சாகுபடிக்குத் தேவையான விதைகளை கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். குறுவை நெல் ஈரப்பதம் குறித்து அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என்றார் நடராசன்.

## தீபாவளி: பூக்கள் விலை உயர்வு

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சென்னை கோயம்பேடு பூ மார்க்கெட்டில் வியாழக்கிழமை (அக்டோபர் 31) வியாழக்கிழமை நிலவரப்படி (அக்.31) பூக்களின் விலை விவரம்: பழைய விலை அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மல்லிகை - 450 (300)

சாமந்தி - 100 (60)

ரோஜா - 70 (40)

முல்லை - 400 (250)

அரளி - 150 (100)

சம்பங்கி - 100 (50)

இன்னும் சில நாள்களுக்கு பூக்களின் விலை இதே நிலையில் நீடித்திருக்கும் என கோயம்பேடு பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கத் தலைவர் அருள்விசுவாசம் தெரிவித்தார்.

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## மல்லிகை கிலோ ரூ.500!

சென்னை : தீபாவளி பண்டிகையையொட்டி பூக்கள் விலை கடுமையாக அதிகரித்துள்ளது. சென்னை, கோயம்பேடு சந்தையில், தீபாவளி பண்டிகையையொட்டி, பூக்கள் விலை, கடந்த வாரத்தை விட இருமடங்கு அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரப்படி, ஒரு கிலோ மல்லிகை, 500 ரூபாய், கனகாம்பரம் 600 ரூபாய், ஜாதி மல்லி, முல்லை 250 ரூபாய், சாமந்தி, ரோஜா 150 ரூபாய்க்கு விற்கப்பட்டன. இந்த விலை விலை மேலும் உயர வாய்ப்பிருக்கிறது.

## வைகையில் 10 நாட்களில் பாசனத்திற்கான தண்ணீர் நிறுத்தம் அச்சத்தில் கள்ளந்திரி விவசாயிகள்

அழகர்கோவில் : கள்ளந்திரி கால்வாயில் பாசனத்திற்கு திறக்கப்பட்ட தண்ணீரை, 10 நாட்களில் நிறுத்தப் போவதாக பொதுப்பணித்துறை ஊழியர்கள் வாய்மொழியாக தெரிவித்து வருவதால், பயிர்கள் சாவியாகும் அபாயத்தில் விவசாயிகள் வேதனையில் உள்ளனர். கள்ளந்திரி கால்வாயில் முதல்போக சாகுபடிக்காக ஜூலை 15ல் தண்ணீர் திறக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கள்ளந்திரி, கருப்பாயூரணி, ஆண்டார்கொட்டாரம் உட்பட 70 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் விவசாயப் பணிகள் துவங்கின. ஒரு மாதத்தில் அறுவடைக்கு தயாராகும் நிலையில் உள்ளன. தென்மேற்கு பருவமழை பொய்த்த நிலையில், வடகிழக்கு பருவமழை கை கொடுக்கும் எனக்கருதி பொதுப்பணித்துறை அதிகாரிகள், 2ம் போகம் மற்றும் மேலூர் பகுதி ஒருபோக சாகுபடிக்காக செப்.,25ல் தாமதமாக தண்ணீர் திறந்தனர். விவசாயப் பணிகள் தீவிரமடைந்தன. கால்வாயில் தண்ணீர் வந்தாலும், 60 சதவீத விவசாயம் மழையை நம்பியே நடக்கிறது. மதுரை மாவட்டம் மற்றும் அணைப் பகுதிகளில் வடகிழக்கு இன்னும் துவங்கவில்லை. வைகை அணையில் 49 அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. அணையில் இருந்து 1650 கனஅடி தண்ணீர் மட்டுமே பாசனத்திற்கு எடுக்க முடியும். இதை முதல்போக சாகுபடிக்கே போதாது. மதுரையின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு, இன்னும் 10 நாட்களில் தண்ணீர் திறப்பதை அதிகாரிகள் நிறுத்தப் போவதாகவும், 2ம் போக சாகுபடி பணிகளில் ஈடுபட வேண்டாம் எனவும் பொதுப்பணித்துறை பணியாளர்கள் கூறி வருகின்றனர். இதனால் நடவுப் பணிகளை துவக்கிய விவசாயிகள் பயிர்கள் சாவியாகிவிடுமோ என்ற அச்சத்தில் உள்ளனர். ஊமச்சிகுளத்தை சேர்ந்த பால்கண்ணன்: செட்டிகுளம், சின்னப்பட்டியில் பகுதியில் நிலம் உள்ளது. தற்போதுதான் ரூ. 40 ஆயிரம் செலவு செய்து நடவு முடித்தேன். அதற்குள் கால்வாயில் தண்ணீரை நிறுத்தப் போவதாக ஊழியர்கள்

கூறுகின்றனர். பருவமழை பெய்தால்தான் பயிரை காப்பாற்ற முடியும். வீரபாண்டி, ராமகிருஷ்ணன், 5வது பாசனக் கோட்ட தலைவர்:
வீரபாண்டியில் கால்வாய் நேரடி பாசனத்தில் உள்ள 12 ஏக்கரில் சில நாட்களுக்கு முன் நடவு செய்தேன். தற்போது கதிர் விடும் நிலையில் உள்ளது. இன்னும் 3 முறை தண்ணீர் வந்தால் மட்டுமே முழு விளைச்சல் கிடைக்கும். அதற்குள் தண்ணீரை நிறுத்தப் போவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தண்ணீரின்றி சாவியானால் ரூ. ஒரு லட்சம் வரை நஷ்டமாகும். தொடர்ந்து தண்ணீர் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அருள்பிரகாசம்,பெரியாறு பாசன திட்டக்குழு உறுப்பினர்: மதுரை மாவட்ட விவசாயம், மழையை எதிர்பார்த்தே உள்ளது. பருவமழை துவங்கி விடும் என்ற நம்பிக்கையில் மேலூர் வரை ஒருபோக சாகுபடிக்கு அதிகாரிகள் தண்ணீர் திறந்தனர். எதிர்பார்த்தபடி இன்னும் பருவமழை துவங்கவில்லை. மேலூரில் 50 ஆயிரம் ஏக்கர், மாவட்டத்தில் 60 ஆயிரம் ஏக்கரிலும் தற்போது நடவு முடிந்துள்ளது. முழு விளைச்சலுக்கு இன்னும் 8 முறை தண்ணீர் தேவை. அணையில் தண்ணீர் இல்லாததால், ஒரு முறை கூட வராது. மழை பெய்தால் மட்டுமே பயிர்களை காப்பாற்ற முடியும். இல்லையென்றால், மாவட்டத்தில் மட்டும் பல கோடி ரூபாய் வரை விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். விவசாயிகள் மாற்றுப் பயிர் விவசாயத்திற்கு முன்வர வேண்டும்.

## மர்ம நோய் தாக்கி மாடுகள் உயிரிழப்பு

கும்மிடிப்பூண்டி : கும்மிடிப்பூண்டி அருகே காமாட்சிபுரம் கிராமத்தை சுற்றியுள்ள ஊர்களில், மர்ம நோயால் பாதிக்கப்பட்ட மாடுகள், அடுத்தடுத்து இறந்து வருகின்றன. காமாட்சிபுரம் கிராமத்தைச் சேர்ந்த ராஜன், 54, என்பவரின் ஆறு மாத சினையாக இருந்த மாடு, மூன்று தினங்களுக்கு முன், மர்ம நோய் தாக்கி இறந்தது. நேற்று முன்தினம், அயநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த தயாளன், 55, என்பவரின் பசுமாடும், அதேபோன்று மர்ம நோய் தாக்கி உயிரிழந்தது. இதற்கு இடையே, சுற்றியுள்ள கிராமப்புறங்களைச் சேர்ந்த, மூன்று மாடுகள், ஒன்றன் பின் ஒன்றாக, நோயால் மடிந்தன.நோய் பாதிப்புக்கு பலியான மாடுகள் அனைத்தும் வாயின் உட்புறம் புண்ணாக இருந்ததாகவும், கால்களில் தண்ணீர் போல் வடிந்ததாகவும், கடைசியாக மூன்று நாட்கள் எதையும் உண்ணாமல் இருந்தன எனவும், அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அடுத்தடுத்து மர்ம நோய்க்கு பலியாகும் மாடுகளை கண்டு, அப்பகுதி மக்கள் அச்சத்திலும், கவலையிலும் உள்ளனர்.இது குறித்து, பெயர் வெளியிட விரும்பாத சம்பந்தப்பட்ட கால்நடை மருத்துவர் கூறுகையில், ""வானிலை மாற்றத்தால் வரக்கூடிய நோயாக இருக்கலாம். உடனடியாக

சிறப்பு முகாம் அமைத்து அயநல்லூர் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மாடுகளுக்கு, தடுப்பு ஊசி போடப்படும்"" என, தெரிவித்தார்.

## திருந்திய நெல் சாகுபடி இணை இயக்குனர் ஆய்வு

திண்டிவனம் : திண்டிவனம் பகுதியில் விவசாயிகள் பயிர் செய்துள்ள திருந்திய நெல் சாகுபடியை வேளாண்மை இணை இயக்குனர் சக்கரவர்த்தி ஆய்வு செய்தார். திண்டிவனம் அடுத்த எண்டியூர், வேப்பேரி, ஏந்தூர் உட்பட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி செய்துள்ளனர். இந்த பணிகளை மாவட்ட வேளாண்மை இணை இயக் குனர் சக்கரவர்த்தி ஆய்வு செய்தார். வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார், வேளாண்மை அலுவலர்கள் சரவணன், கதிரேசன், எத்திராஜ் உடனிருந்தனர்.வேளாண்மை இணை இயக்குனர் சக்கரவர்த்தி கூறுகையில், மாவட்டத்தில் வேளாண்மை துறை மூலம் விவசாயிகளுக்கு அறிவுறுத்தி 8 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள் ளது. திருந்திய நெல் சாகுபடி மூலம் ஏக்கருக்கு 45 மூட்டைகள் மகசூல் கிடைக்கும் என கூறினார்.

## ஆலாத்தூரில் நெல் நடவு பணி துவக்கம்

விழுப்புரம் : விழுப்புரம் அடுத்த ஆலாத்தூரில் வடகிழக்கு பருவமழையைப் பயன்படுத்தி, நெல் நடவு பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர். இந்தாண்டு வடகிழக்கு பருவமழை காலதாமதமாக, கடந்த 21ம் தேதி துவங்கியுள்ளது. இருப்பினும் இது வரை கனமழை பெய்யவில்லை. சம்பா போகத்திற்கு முன் கூட்டியே நாற்று விட்டு, நடவு செய்ய, தயார் நிலையில் இருந்த விவசாயிகள் தற்போது பெய்து வரும் மழையைப் பயன்படுத்தி நிலத்தை உழுது தயார் படுத்தியுள்ளனர். நாற்றுகளை பிடுங்கி, நடவு செய்ய உள்ள நிலத்தில் பரப்பி வருகின்றனர்.மழை பெய்து ஏரி மற்றும் கால்வாய்களில் போதிய தண்ணீர் இல்லாமல், சிறிதளவு தேங்கியுள்ள மழை நீரை பயன்படுத்தி விவசாயிகள் ஆர்வமுடன் நெல் நடவு பணி யில் ஈடுபட்டுள்ளனர்.

## கரும்பு விவசாயிகள் கருத்து கேட்பு கூட்டம்

அரூர்: கரும்பு விவசாயிகள் கருத்து கேட்பு கூட்டம், வரும், 4ம் தேதி மாலை, 3 மணிக்கு அரூர் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடக்கிறது.

சர்க்கரை துறை இயக்குனர் வெளியிட்ட அறிக்கை:

அரூர் அடுத்த கோபாலபுரம் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கரும்பு சாகுபடி பரப்பில் இருந்து தீர்த்தமலை பிர்க்கா பகுதியை தண்டராம்பட்டு தாலுகா, கொழுந்தம்பட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பண்ணாரியம் சர்க்கரை ஆலைக்கு பிரித்தளித்தது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தொடர்புடைய இதர வழக்குகள் மீது, கடந்த, 2010ம் ஆண்டு வழக்கப்பட்ட தீர்ப்பில் கரும்பு சாகுபடி பரப்பை பிரித்தளித்தல் வழக்கில் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதியான தீர்த்தமலை பிர்க்காவை சேர்ந்த மனுதாரர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் ஆலை அங்கத்தினர் கருத்துக்களை கேட்டறிந்து பின்னர் பிரித்தளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், சர்க்கரை துறை இயக்குனர் மற்றும் ஆணையர் தலைமையில், வரும், 4ம் தேதி மாலை, 3 மணிக்கு அரூர் ஸ்ரீராகவேந்திரா திருமண மண்டபத்தில் கருத்து கேட்பு கூட்டம் நடக்கிறது. எனவே, சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதியான தீர்த்தமலை பிர்க்காவை சேர்ந்த வழக்குகள் தொடர்புடைய மனுதாரர்கள் ஆலை அங்கத்தினர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் கருத்து தெரிவிக்க விரும்பும் கரும்பு பயிரிடும் விசவாயிகள் உரிய ஆவணங்களுடன் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## முறைவைத்து தண்ணீர்...திறப்பு! பவானிசாகர் நீர்மட்டம் சரிவு

கோபிசெட்டிபாளையம்: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளதால், எல்.பி.பி., வாய்க்கால் பாசனத்தில் நான்கு நாட்கள் தண்ணீர் நிறுத்தம் செய்து, எட்டு நாட்கள் தண்ணீர் திறப்பு செய்யும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. பவானிசாகர் அணையில் இருந்து எல்.பி.பி., பாசனத்துக்கு ஆக., 23ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தண்ணீர் திறப்பின்போது, அணையின் நீர்மட்டம், 85 அடியாக இருந்தது. அணையில் இருந்து பாசனத்துக்கு இதுவரை, 13 டி.எம்.சி., தண்ணீர் பயன்படுத்தப்பட்டுள்ளது. பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியில் போதிய மழை பெய்யாததால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. இதனால், எட்டு நாட்களுக்கு தண்ணீர் திறப்பு, இரண்டு நாட்களுக்கு தண்ணீர் நிறுத்தம் என்ற முறை அமல்படுத்தப்பட்டது. அணையின் நீர்மட்டம், 70 அடியாகவும், கொள்ளளவு, 11 டி.எம்.சி.,யாக உள்ளது. அணையில் இருந்து எல்.பி.பி., வாய்க்காலில், 2,300 கனஅடி நீர் திறக்கப்படுவதால், ஐந்து நாட்களுக்கு ஒரு டி.எம்.சி., தண்ணீர் குறையும் நிலை உள்ளது. எல்.பி.பி., பாசனத்தில் நடவு முறை முடிந்துள்ளதால், அணையில் உள்ள நீரை, முறை வைத்து சிக்கனப்படுத்த, பொதுப்பணி துறையினரும், விவசாய சங்கத்தினரும் சேர்ந்து

முடிவு செய்து, நான்கு நாட்களுக்கு தண்ணீர் நிறுத்தப்படுவது என தீர்மானித்துள்ளனர். கீழ்பவானி முறைநீர் பாசன பகிர்மான கமிட்டி தலைவர் செங்கோட்டையன், செயலாளர் வெங்கடாசலபதி ஆகியோர் கூறியதாவது:

எல்.பி.பி., பாசனத்தில் நடவு பணிகள் பெருமளவு முடிந்துள்ள நிலையில், அணையில் உள்ள நீரை, முறை வைத்து, சிக்கனமாக பயன்படுத்தினால், பருவமழையை எதிர்பார்த்து, முழு விளைச்சல் பெற முடியும். பாசன அமைப்புகளும், பொதுப்பணி துறையினரும், அணையின் நீர் இருப்பை கருத்தில் கொண்டு, முறைப்பாசனம் பிரிவு வாய்க்கால் மற்றும் நேரடி மதகுகளில் நான்கு நாட்கள் தண்ணீர் நிறுத்தம், எட்டு நாட்கள் தண்ணீர் திறப்பு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. முறைப்பாசனம் அக்., 28ம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தண்ணீர் திறப்பு காலங்களில் முழு அளவு நீர் வாய்க்காலில் திறக்கப்படும். நீர் திறப்பு காலங்களில் பாசன நீர் பற்றாக்குறை இருப்பின் அந்தந்த பகுதி பொதுப்பணித்துறை பொறியாளர்கள், பாசன சபை நிர்வாகிகளை தொடர்பு கொள்ள வேண்டும். நீர் திறப்பு மற்றும் நிறுத்தம் காலை, 6 மணியாகும். அணையின் நீர் இருப்பு குறைவாக உள்ளதால், பாசன நீரை சிக்கனப்படுத்தும் வகையில், முறைப்பாசனம் அமல்படுத்தப்பட்டுள்ளதால், பாசன விவசாயிகள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும், என அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

### அணைகளின் நீர் மட்டம்

தேனி : தேனியில், நேற்று காலை வழக்கம் போல் வெயில் அடித்தது.நேற்று மாலை மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பெரியாறு 117.80 (136) அடி, நீர் வரத்து 596 கன அடி. நீர் திறப்பு 800 கன அடி. வைகை 47.47 (71) அடி, நீர் வரத்து 335 கன அடி, நீர் திறப்பு 60 கன அடி. மஞ்சளாறு 45.20(57), நீர் வரத்து 26 கன அடி,வெளியேற்றம் 8 கன அடி. சோத்துப்பாறை 112.83 (126.28), நீர் வரத்து117 கன அடி மற்றும் நீர் வெளியேற்றம் தலா 3 கன அடி.

### அமெரிக்கா பறக்கும் கொடைக்கானல் காய்கறிகள் உற்சாகத்தில் விவசாயிகள்

கொடைக்கானல் : பாரம்பரிய காய்கறி சாகுபடி செய்து வந்த கொடைக்கானல் விவசாயிகள், உயர்ரக விவசாயம் மூலம் அமெரிக்காவிற்கு காய்கறி ஏற்றுமதி செய்யத் துவங்கியுள்ளனர். கொடைக்கானல் மேல்மலைப் பகுதியில் வில்பட்டி, பள்ளங்கி, பூம்பாறை, மன்னவனூர், கீழான வயல், கவுஞ்சி, பூண்டி, கிளாவரை, போலூர், கூக்கால், பழம்புத்தூர், புதுப்புத்தூர் என கிராமங்களில், கேரட், உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ்,

முள்ளங்கி, பீன்ஸ், பட்டாணி, பீட்ரூட் உள்ளிட்ட காய்கறிகளை பயிரிட்டு வந்தனர். விளைந்த காய்கறிகளை, மதுரை மார்க்கெட்டிற்கு அனுப்புவர். இந்நிலையில், 2010 ல், "மேல்மலை கிராம பகுதியில், 500 விவசாயிகளை இணைத்து, 2010 ல் "கொடைக்கானல் காய்கறி மற்றும் பழங்கள் உற்பத்தியாளர் சங்கம்', பொறியாளர் மூர்த்தி என்பவரால் துவக்கப்பட்டது. இச்சங்கம் மூலம் காய்கறி சாகுபடியில் புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

மூர்த்தி கூறியதாவது:

கொடைக்கானலில் கேரட் உள்ளிட்ட காய்கறிகளை பயிரிட்டாலும், விவசாயிகளுக்கு குறைந்த விலை தான் கிடைக்கிறது. அப்போதுதான், அமெரிக்காவில் "மெக்டொனால்டு' கம்பெனி பற்றி அறிந்தோம். அவர்கள் தயாரிக்கும் "சாண்ட்விச்' களில் "லெட்டியூஸ் ஐஸ்பெர்க்' என்ற முட்டைக்கோஸ் போன்ற காய்கறி இலைகளை பயன்படுத்துவது தெரியவந்தது. அந்த காய்கறி இலைகள் அதிக சத்துக்கொண்டது. "லெட்டியூஸ் ஐஸ்பெர்க்' மலைப்பிரதேசங்களில் மட்டுமே வளரக் கூடியது. முதன்முறையாக, கொடைக்கானல் மேல்மலை கிராமங்களான மன்னவனூர், கவுஞ்சி, பூண்டி ஆகிய இடங்களில், சோதனை முயற்சியாக பயிரிட்டோம். இவை, 58 நாட்களில் முழுமையான வளர்ச்சி கண்டதோடு, "உயர் ரகமாகவும், தரமாகவும் உள்ளது' என, ஜெர்மன் விவசாயத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கொடைக்கானலில் இப்புதிய பயிர் சாகுபடி, அமோக வெற்றி பெற்றுள்ளது. இவ்வாறு கூறினார். கவுஞ்சியை சேர்ந்த விவசாயி முருகன் கூறியதாவது: கேரட் மகசூல் எடுக்க, 90 நாட்களாகும். உருளைக்கிழங்கு 120 நாட்கள். பூண்டு 150 நாட்கள். ஆனால், "லெட்டியூஸ் ஐஸ்பெர்க்' ரகம், 58 நாட்களில் மகசூல் கிடைத்துவிடுகிறது. கேரட், உருளைக்கிழங்கு போன்ற காய்கறிகளை, மதுரையிலுள்ள மொத்த வியாபாரிகள் கேட்கும் விலைக்கு கொடுக்க வேண்டியதுள்ளது. ஆனால், "லெட்டியூஸ் ஐஸ்பெர்க் பூத்' தாவரத்தை, பெங்களூரு அனுப்பி பதப்படுத்தி, பேக்கிங் செய்து, அமெரிக்கா அனுப்புகிறோம். வழக்கமான கிடைக்கும் லாபத்தை விட, 25 சதவீதம் கூடுதலாக கிடைக்கிறது. இவ்வாறு கூறினார்.

### காணைநோய் பரவாமல் இருக்க நடவடிக்கை

திண்டுக்கல் : பசுக்களின் இறப்பிற்கு காரணமான காணை நோய் மற்ற மாவட்டங்களுக்கு பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அரசின் இலவச திட்டத்தின் மூலம், கால்நடைகளின் எண்ணிக்கை கிராமங்களில் அதிகரித்துள்ளது.

வைரஸ் பாதிப்பிற்குள்ளாகாதவாறு பாதுகாப்பதற்காக அனைத்து மாவட்டங்களுக்கும் காணை தடுப்பூசி போதுமான அளவு வினியோகிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், பழநி அருகே கீரனூரில் காணை நோய் தாக்குதலில் 13 பசுக்கள் சில தினங்களுக்கு முன்பு இறந்தன. கால்நடை நோய் புலனாய்வு பிரிவினர் நடத்திய விசாரணையில், பண்ணையின் உரிமையாளர்கள் தங்கள் பசுக்களுக்கு காணை தடுப்பூசி தேவையில்லை என கூறி டாக்டர்களை திருப்பி அனுப்பியது தெரியவந்தது. கால்நடைதுறை உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறியதாவது: தடுப்பூசி செலுத்தப்பட்ட பசுக்கள், அதன் வீரியம் குறையும் வரை இரண்டு நாட்கள் தீவனம் உட்கொள்ளாமல் மெலிந்திருக்கும். இதனால் பால் உற்பத்தியும் குறைவாக இருக்கும் என்பதால், பண்ணை உரிமையாளர்கள் மாடுகளுக்கு தடுப்பூசி போட மறுத்துள்ளனர் என்றார். இதையடுத்து, காணை வைரஸ் நோய் மற்ற மாவட்டங்களில் உள்ள கால்நடைகளுக்கு பரவாமல் தடுப்பதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### தேனி நெல் விவசாயிகளை தேடி கர்நாடகா வியாபாரிகள் முகாம்

தேனி : தேனி மாவட்டத்தில் இருந்து, நெல் கொள்முதல் செய்வதற்காக கர்நாடகா வியாபாரிகள், விவசாயிகளின் வீடு தேடிச் சென்று முன்பணம் கொடுத்து வருகின்றனர். தேனி மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கருக்கும், அதிக பரப்பில் நெல் அறுவடை பணிகள் தொடங்கி உள்ளன. கம்பம், கூடலூர், உத்தமபாளையம், சின்னமனூர் பகுதியில் தற்போது அறுவடை பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. இயந்திரங்கள் மூலமே பெரும்பாலும் அறுவடை நடந்து வருகிறது.மாவட்ட நிர்வாகம் சார்பில் உத்தமபாளையம், சின்னமனூர், கம்பம் பகுதியில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இங்கு சாதாரண ரக நெல்லுக்கு, கிலோ 13.40 ரூபாயும், சன்னரக நெல்லுக்கு 14.15 ரூபாயும் விலை கிடைக்கிறது. கொள்முதல் நிலையத்திற்கு நெல்லை கொண்டு சென்று இறக்கி கொடுக்கும் எல்லா செலவுகளையும் விவசாயிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும். தவிர, 17 சதவீதம் ஈரப்பதம் இருந்தால் மட்டுமே, எடுத்துக் கொள்வார்கள். அதிலும் அதிகாரிகளுக்கு கமிஷன், அளவில் குளறுபடி, பட்டுவாடா தாமதம் போன்ற பல்வேறு தவறுகள் நடக்கின்றன. இதனால் அரசு நெல் கொள்முதல் மையங்களில் நெல் விற்பனை செய்ய விவசாயிகள் தயங்குகின்றனர். தவிர, களத்தில் இருந்து நெல் ஏற்றி டிராக்டரில் கொண்டு சென்று இறக்கி எடை போடும் செலவுகளையும் விவசாயிகளே ஏற்க வேண்டி உள்ளது. ஆனால் கர்நாடகா வியாபாரிகள், லாரி, எடை மிஷினுடன் விவசாயிகள் கதிரடிக்கும் களத்திற்கே வந்து விடுகின்றனர். 20 சதவீதம் முதல் 22 சதவீதம் வரை ஈரப்பதம் இருந்தால் கூட நெல் வாங்கிக் கொள்கின்றனர். பணம் அறுவடைக்கு முதல்

வாரமே வீட்டிற்கு வந்து விடுகிறது. கிலோவிற்கு அரசு வழங்கும் விலையை கொடுத்து விடுகின்றனர். விவசாயிகளுக்கு எந்த செலவும் கிடையாது. இது போன்ற சலுகைகள் கிடைப்பதால் விவசாயிகளும் கர்நாடகா வியாபாரிகளுக்கே நெல் சப்ளை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

### வறட்சி: ஆய்வு செய்த கலெக்டர்

விருதுநகர் : விருதுநகர்மாவட்டம் வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் ஒன்றியங்களில், வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை, கலெக்டர் ஹரிஹரன் ஆய்வு செய்தார். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கான்சாபுரம் வ.புதுப்பட்டி, செண்பகத்தோப்பு பகுதி, சேத்தூர் ஊராட்சிக்கு சென்று, தென்னந்தோப்பு வைத்துள்ள விவசாயிகளை சந்தித்து, பாதிக்கப்பட்ட தென்னை விபரங்களை கேட்டறிந்தார்.அரசின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய உதவிகள் கிடைக்க, தேவையான அனைத்து நடவடிக்கைகளும், மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்படுமென உறுதியளித்தார். வேளாண் இணை இயக்குனர் சுப்பையா, கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்) முருகதாஸ் உடனிருந்தனர்.

### கம்பு பண்ணை பள்ளி பயிற்சி

அருப்புக்கோட்டை அருகே கொப்புசித்தம்பட்டியில், விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ், கம்பு பண்ணை பள்ளி பயிற்சி வகுப்பு நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் மணிசேகரன் தலைமை வகித்தார். மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் ராஜாராம், பேராசிரியர் செந்தில்வேல் முன்னிலை வகித்தனர். விதை ரக தேர்வு, விதை கடினப்படுத்துதல், விதை நேர்த்தி, அடிஉரமிடல் மற்றும் பயிர்களை தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி விளக்கப்பட்டது.

## கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.7 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை



கோபிசெட்டிபாளையம்,

கோபியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், நேற்று மதியம் கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் கரட்டடிபாளையம், அளுக்குளி, கலிங்கியம், அயலூர், குருமந்தூர், கொளப்பலூர், வெள்ளாங்கோவில், காசிபாளையம், அரசூர், டி.என்.பாளையம், கள்ளிப்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த 84 விவசாயிகள் மொத்தம் 263 மூட்டைகள் கொப்பரை தேங்காயை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர். கொப்பரை தேங்காய் குவிண்டால் ஒன்று அதிகபட்ச விலையாக 6 ஆயிரத்து 439 ரூபாய்க்கு விலை போனது. இது கிலோ ஒன்றுக்கு 64 ரூபாய் 39 காசுகள் ஆகும். குறைந்தபட்ச விலையாக குவிண்டால் ஒன்று 6 ஆயிரத்து 169 ரூபாய்க்கு விலை போனது. சராசரியாக குவிண்டால் ஒன்று 6 ஆயிரத்து 269 ரூபாய் என மொத்தம் ரூ.7 லட்சத்துக்கு விற்பனை ஆனது. கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், பெருந்துறை, ஊத்துக்குளி, பொள்ளாச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் கொப்பரை தேங்காயை போட்டி போட்டு வாங்கிச் சென்றனர்.

## பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.11 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை



அம்மாபேட்டை,

பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.11 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனையானது.

<u>தேங்காய்</u>

அம்மாபேட்டை அருகே உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 4 ஆயிரத்து 139 தேங்காய்கள் கொண்டுவரப்பட்டு இருந்தன. இதில் சிறிய தேங்காய் ஒன்று 6 ரூபாய் 50 காசுக்கும், பெரிய தேங்காய் ஒன்று 13 ரூபாய்க்கும் என மொத்தம் 32 ஆயிரத்து 714 ரூபாய்க்கு விற்பனையானது. கொப்பரை தேங்காய் 82 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 5 ஆயிரத்து 909 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 6 ஆயிரத்து 339 ரூபாய்க்கும் என மொத்தம் 86 ஆயிரத்து 143 ரூபாய்க்கு விற்பனையானது.

<u>நெல்–நிலக்கடலை</u>

நெல் 146 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இதில் பொன்னி ரகம் குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 1,676 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,776 ரூபாய்க்கும் ஏலம் போனது. ஏ.டி.டி 39 ரகம் குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 1,346 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,400 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.1 லட்சத்து 35 ஆயிரத்து 468 ரூபாய்க்கு விற்பனையானது. நிலக்கடலை 757 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இதில் காய்ந்த நிலக்கடலை குவிண்டால் ஒன்று

குறைந்தபட்ச விலையாக 3 ஆயிரத்து 330 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 250 ரூபாய்க்கும் ஏலம் போனது. பச்சை நிலக்கடலை குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 1,460 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 2 ஆயிரத்து 100 ரூபாய்க்கும் ஏலம் போனது.

மக்காச்சோளம்

மக்காச்சோளம் 19 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 901 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,303 ரூபாய்க்கும் என மொத்தம் 22 ஆயிரத்து 973 ரூபாய்க்கு விற்பனையானது. எள் 5 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இதில் வெள்ளை எள் குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 9 ஆயிரத்து 169 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 11 ஆயிரத்து 669 ரூபாய்க்கும் என மொத்தம் 20 ஆயிரத்து 471 ரூபாய்க்கு விற்பனையானது.

இந்த ஏலத்தில் விவசாய விளைபொருட்கள் மொத்தம் 10 லட்சத்து 95 ஆயிரத்து 857 ரூபாய்க்கு விற்பனையானது.

## எந்திரம் மூலம் நெல் நடவு பணி கலெக்டர் ஆய்வு

திருமானூர்,

அரியலூர் மாவட்டத்தில் திருமானூர் பகுதியில் வேளாண்மை பொறி யியல் துறையின் சார்பில் எந்திரத் தில் நெல் நடவு மூலம் விவசாயம் நடை பெறுவதை மாவட்ட கலெக்டர் சரவண வேல் ராஜ் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செயல் விளக்கம்

அரியலூர் மாவட்டம் திரு மானூர் ஒன்றியம் குல மாணிக் கம் கிராமத்தைச் சார்ந்த டோம்னிக்பெஸ்கியின் இலந்தைக்கூடம் கிராமத்தில் உள்ள வயலில் எந்திரத்தின் மூலம் நெல் நடவு செய்வது குறித்த செயல் விளக்கம் மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் முன்னிலையில் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் நடத்தி காட்டப் பட்டது.

இந்த செயல்விளக்கத்தில், முதலில் எந்திரத்தின் மூலம் நடவு செய்வதற்கான நெல் நாற்றங்கால், தட்டுகளில் தயாரிக்கும் முறை பற்றி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப் பட்டது. தட்டு நாற்றங்கால் தயாரிக்க பயன்படுத்தும் மண் வண்டல் கலந்த மணற்பாங்காக இருப்பதை பார்வையிட்டு விதைகளை முளை கட்ட வைத்த நிலையில் பயன் படுத்தும்படி கேட்டு கொண் டார்.

சிறிய வகை நடவுக்கருவி

விதைகள் சீராக தட்டுகளில் பரப்ப தனியே கருவி பயன் படுத்துவதையும். இந்நாற்றுத் தட்டுகளுக்கு பூவாளி கொண்டு நீர் தெளித் தும். 14 முதல் 18 நாட்கள் வளர்ந்த நாற்று

நடவுக்கு பயன்படுத்தும் முறையையும் பார்வை யிட் டார். நடவு செயல் விளக்கத் திற்கு மிக எளிதில் கையாளக் கூடிய சிறிய வகை நடவு கருவி பயன்படுத்தப்பட்டது. இது 4 வரிசை நடவு செய்யக்கூடிய அளவிலானது. இதன்மூலம் 1 ஏக்கர் நடவுப்பணியை 2 மணி நேரத்தில் முடிக்கலாம். இதன் சராசரி விலை ரூ.2.30 லட்சமாகும். இக்கருவியை சொந்தமாக வாங்கிக்கொள்ள வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ரூ 50 ஆயிரம் வரை மானியத்தில் வழங்கப் பட்டு எந்திர நெல் நடவு முறையை பார்வையிட்டார். 8 வரிசை நடவு செய்யக்கூடிய பெரிய வகை நடவு எந்திரங்களும் உள்ளன. இவ் எந்திரத்தின் மூலம் 1 மணிக்கு 1 ஏக்கர் வரை விரைவாக நடவு செய்யலாம். இதன் விலை ரூ.10.57 லட்சம் வரையில் இருக்கிறது. இதற்கான அரசின் அதிகபட்ச மானியம் ரூ.4.00 லட்சமாகும். இந்த வாய்ப்பினை விவசாய பெரு மக்கள் நன்கு பயன்படுத்தி கொண்டு சிக்கன முறையில் விவசாயம் செய்து நல்ல லாபம் அடையுமாறு கேட்டு கொண்டார்.

13 தடுப்பணைகள்

மேலும், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் மழை நீர் சேகரிப்பு மற்றும் ஓடு நீர் மேலாண்மைத் திட் டத்தின் கீழ் அரியலூர் மாவட் டத்திற்கு 13 தடுப்பணைகள் கட்டும் பணி 46 லட்சத்து 26 ஆயிரம் நிதி ஒதுக்கீட்டில் அனுமதிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அரியலூர் வட்டம் கீழப்பளூர் கிராமத் தில் 4 தடுப்பணைகள், கருப்பூர் கிராமத்தில் 2 தடுப் பணைகள் மற்றும் அருங்கால் கிராமத்தில் 3 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. கீழப் பளூர் மற்றும் கருப்பூர் கிரா மங்களில் கட்டப்பட்ட தடுப் பணை களை மாவட்ட கலெக்டர் ஆய்வு செய்தார்.

இத்திட்டத்தின் மூலம் மழை நீரை அறுவடை செய்வ துடன் மண் அரிமானம் பெரு மளவில் தடுக்கப் படுகிறது. தேக்கப்படும் மழை நீரால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வது டன் அருகில் உள்ள மானா வாரி பயிர்களுக்கு இது மிகவும் உபயோகமாக இருக்கு மாறு அவர் தெரிவித்தார். இவ்வாய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் கருப்பசாமி, வேளாண்மை பொறியியல்துறையின் செயற் பொறியாளர் மணி, உதவி பொறியாளர்கள் மோகன், நெடுமாறன், இள நிலை பொறி யாளர்கள்.பச்ச முத்து, முருக தாஸ் மற்றும் வரதராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.